| | |
|---|---|
| 5.1 | 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்தப்படுகிறது. |
| 5.2 | மேலே பத்தி 5.1ல் உள்ள ஆணையினை செயல்படுத்த, சம்பந்தப்பட்ட நியமன அலுவலர்களின் ( Appointing authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority) அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட, உரிய செயல்முறை ஆணை (Proceedings) வெளியிட்டு, தொடர்புடைய அரசு பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தப்படுகின்றனர். |

எனவே பார்வை 2ல் காண் அரசாணை மற்றும் பார்வை 3ல் காண் பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகளில் தெரிவித்துள்ளபடி, எந்தவித விதித்தளர்வு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாததால், கீழ்காண் நிபந்தனைகளின் அடிப்படையில் வல்லநாடு அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக 28.02.2017 முற்பகல் முதல் நியமனம் செய்யப்பட்ட திரு.மு.கணபதி சுப்பிரமணியன் என்பாருக்கு இளநிலை உதவியாளர் பணியில் 28.02.2017 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

நிபந்தனை

01. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும்பொருட்டு பணிப்பதிவேட்டில் பணிவரன்முறை பதிவு செய்யப்பட்டு அதன் பக்க நகல் உடன் அனுப்ப வேண்டும்.
02. பவானி சாகர் அடிப்படைப் பயிற்சி மற்றும் தகுதிகாண் பருவம் முடித்த பிறகே இரண்டாவது மற்றும் தொடர் ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கப்படல் வேண்டும்.
03. தகுதிகாண் பருவம் காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

முதன்மைக் கல்வி அலுவலர்
தூத்துக்குடி

பெறுநர்.

01. மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை), தூத்துக்குடி
02. தனியர் (உரிய வழியாக)
03. அலுவலக கோப்பிற்கு
04. தலைமையாசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, வல்லநாடு.

தூத்துக்குடி மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்

முன்னிலை:- திரு.பாலதண்டாயுதபாணி,எம்.எஸ்.சி., எம்.பில்.,

ந.க.எண்.6685/அ1/22 நாள் - 12.2022

பொருள் : பள்ளிக்கல்வி- கருணை அடிப்படையில் நியமனம்- தமிழ்நாடு அமைச்சுப்பணி - தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி கல்வி மாவட்டம் - கருங்குளம் , ஊராட்சி ஒன்றியம் உதவித் தொடக்கக்கல்வி அலுவலகத்தில் கூடுதல் உதவித் தொடக்கக்கல்வி அலுவலராக பணியாற்றியபோது பணிக்காலத்தில் காலமான திரு.முத்துசாமி என்பாரின் வாரிசான திரு.மு.கணபதி சுப்பிரமணியன் என்பாருக்கு நியமன நாளான 28.02.2017 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணையிடல் - சார்பு.

பார்வை :

01. தூத்துக்குடி மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.288/அ1/16 நாள். ,02.2017.
02. அரசாணை நிலை எண்.48 தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை (க்யூ1) நாள்.26.02.2021.
03. சென்னை-6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.21925/ஜே/இ4/2021 நாள். 9.4.21

---

பணிக்காலத்தில் காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டப்படி, தூத்துக்குடி கல்வி மாவட்டம், கருங்குளம் , ஊராட்சி ஒன்றியம் உதவித் தொடக்கக்கல்வி அலுவலராகப் பணியாற்றியபோது பணிக்காலத்தில் 09.05.1995 அன்று காலமான திரு.முத்துசாமி என்பாரின் வாரிசான திரு.மு.கணபதி சுப்பிரமணியன் என்பாருக்கு பார்வை 1ல் காண் தூத்துக்குடி மாவட்டக்கல்வி அலுவலரின் செயல்முறைகளின்படி 28.02.2017 முற்பகல் முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் வல்லநாடு அரசு மேல்நிலைப்பள்ளியில் இளநிலை உதவியாளராக 28.02.2017 முற்பகல் முதல் பணியமர்த்தப்பட்டார்.

பார்வை 2ல் காண் அரசாணையில் ,